DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.219/2022**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா.1
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | பழனிமுத்து |
| Father/ Husband Name | : | சொக்கலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

1வது எதிரி ஆஜர். 2து எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of **10.07.2023**

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் கே.சிறுவனூரில் குடியிருந்து விவசாய வேலை பார்த்து வருகிறேன். கடந்த 25.09.2021ம் தேதி ரோட்டின் கீழ் தண்ணீர் போவதற்காக பெரிய குழாய் அரசாங்கத்தின் மூலம் பதித்தார்கள். அதை நான் பதிக்க சொன்னதாக எதிரிகள் நினைத்துக்கொண்டு என்னை எதிரிகள் இருவரும் கையால், மற்றும் கால்களால் எதிரி வீட்டுக்கும், என் வீட்டுக்கும் இடையே மிதித்தார்கள். அதன் பின்னர் தேவகோட்டை தாலுகா காவல்நிலையம் வந்து புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1).** போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் கொடுத்த புகார் மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. புகாரை யாரை எழுதியது என்றால் எனது மகன் நித்தீஸ் ஐயப்பன் எழுதினான். நான்

நிரந்தரமாக எங்கு வசிக்கிறேன் என்றால் கே.சிறுவனூரில் வசிக்கிறேன். தேவகோட்டையில் எங்கு வசிக்கிறீர்கள் என்றால் அவ்வப்போது தேவகோட்டை ராம்நகரில் உள்ள என் வீட்டுக்கு வந்துபோவோம். எதிரிகள் தாக்கியதாக நான் சொன்னதில் அதில் எனக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் வயிற்றில் காயம் ஏற்பட்டது. எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றும் அதனால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. எந்த தேதியில் தூம்பு அமைத்தார்கள் என்றால் 21.09.2021ம் தேதியிலிருந்து தூம்பு போடுவது சம்மந்தமாக இடத்தை பார்த்துக்கொண்டு இருந்தார்கள் 25.09.2021ம் தேதி பிரச்சனை நடந்தது. 27.09.2021ம் தேதி எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். 27.09.2021ம் தேதி எந்த பிரச்சனை நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல திட்டிக்கொண்டே இருந்தார்கள். நான் தேவகோட்டையில் தான் வசிக்கிறேன் என்றும் கே.சிறுவனூரில் வசிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் மீது புகார் கொடுத்தால் தான் என்வீட்டிற்கு அருகே குழாய் பதிக்கமாட்டார்கள் என்பதால் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு அருகே தூம்பை வைத்துள்ளார்கள் என்றால் எதிரிகள் வீட்டிலிருந்து என் வீட்டு வரை அமைத்துள்ளார்கள்.

3. சம்பவம் நடந்தது காலையா அல்லது மதியமா என்றால் 100 நாள் வேலைக்கு போய்விட்டு வந்த பின்னர் தோராயமாக காலை 11.00 மணிக்கு மேலே இருக்கும் ஆனால் சரியான நேரத்தை நான் அப்போது பார்க்கவில்லை. புகார் மனுவில் சம்பவ நேரத்தை குறிப்பிடவில்லை என்றால் நியாபகம் இல்லை. எதிரிகளும் நாங்களும் உறவினர்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு எப்போது போனேன் என்றால் புகார் மனு கொடுத்த பின்னர் சென்றேன். ஆனால் தேதி நியாபகம் இல்லை. 27.09.2021 ம் தேதி தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான்.

4. எனக்கும் எதிரிகளுக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் உண்மையிலேயே நடந்திருந்தால் அன்றைய தினமே புகார் கொடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே எனக்கு வலி ஏற்பட்டிருந்தால் சம்பவ தினத்தன்றே மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் வலிக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று

சொன்னால் சரியல்ல. 100 நாள் வேலைக்கு போய் விட்டு வரும்போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் என் வீட்டுக்கு அருகே நான் மட்டும் தான் போனேன். ஆனால் வேலை முடிந்து நிறைய பேர் என்னுடன் வந்தார்கள். எந்த இடத்தில் சம்பவ தினத்தன்று 100 நாள் வேலை பார்த்தேன் என்றால் நாரணமங்கலம் ரோடு அருகே குளக்கால் அருகே 100 நாள் வேலை பார்த்தேன். மேற்படி குளக்காலுக்கும் எனது வீட்டுக்கும் 1கி.மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

5. பொதுவாக 100 நாள் வேலைக்கு எத்தனை போய்விட்டு எத்தனை வருவோம் என்றால் அவ்வப்போது நேரத்தை மாற்றிஅமைப்பார்கள். நான் சொன்னது போல் 100 நாள் வேலை திட்டத்தில் நேரத்தை மாற்றி அமைக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த சமயத்தில் 100 நாள் வேலை காலை 8 மணிக்கு ஆரம்பித்து மதியம் 2 மணி நேரம் வரை நடக்கும். இடையில் சாப்பிடுவதற்காக வருவோம். சம்பவம் நடந்த போது நான் காலை 10.00மணிக்கு வந்தேன். சாப்பிட வரும்போதே பிரச்சனை ஆகிவீட்டது அதனால் திரும்ப வேலைக்கு செல்லவில்லை.

6. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எது என்றால் என் வீட்டுக்கும் எதிரிகள் வீட்டுக்கும் அருகே தான் நடந்தது. நான் தேவகோட்டையில் தான் வசிக்கிறேன் என்றும் 100 நாள் வேலைக்கு போய்விட்டு தேவகோட்டைக்கு வந்து விடுவேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ தினத்தன்று நான் 100 நாள் வேலை முழுமையாக பார்த்துவிட்டு தான் சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் புகாரில் வேலைக்கு போனதாக தான் சொல்லியுள்ளேன் என்றும் 100 நாள் வேலை என்று சொல்லவில்லை என்றால் நியாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது என்னை தவிர வேறு யாரும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காளிமுத்து என்பவர் இருந்தார் என் கணவரும் வந்தார். சுப்பையாவின் மனைவியும் சத்தம் கேட்டு வந்தார்.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.